# ஒலிக்கும் யாதவர் முரசு

# Olikkum Yadavar Murasu

Volume: 18 Issue: 9 July: 2023 Bilingual Monthly Price Rs.10/- Annual Subscription Rs.120/-

முரசு: 18 ஒலி: 9 ஜூலை: 2023 தமிழ் - ஆங்கிலம் மாத இதழ் விலை ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.120/-

சோபகிருது ஆண்டு ஆனி - ஆடி மாதம்

| | | | |
|---|---|---|---|
| | உறவுகளோடு<br>இணைவோம் உயர்வோம் | யாதவமே பாரதம்<br>பாரதமே யாதவம் | |





**யாதவ் பவன்**
**கணபதி ஹோமம்**





**மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்குகல்வி உதவி வழங்கும் விழா**

# மாவீரனுக்கு அஞ்சலி செலுத்திய தலைவர்கள்



மேதகு தெலுங்கானா மற்றும் புதுச்சேரி ஆளுநர்
திருமதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள்



மாண்புமிகு தமிழக முதல்வர்
திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள்



மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள்



மாண்புமிகு தமிழக எதிர்க்கட்சித் தலைவர்
திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்



பாஜக மாநிலத் தலைவர்
திரு. அண்ணாமலை அவர்கள்



மதிமுக பொதுச்செயலாளர்
திரு. வைகோ அவர்கள்

ஒலி 9

# ஒலிக்கும்

## யாதவர் முரசு

யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ்

ஜூலை - 2023

முரசு 18

பதிவு அலுவலகம்

**யாதவர் பேரவை**

Old No: 16, New No: 33, East Ramanathan Salai,
Egmore, Chennai – 600 031.
Email: yadavarperavai@gmail.com
Mobile: 94441 34142.

## ***உங்களோடு ஒரு சில நிமிடங்கள்!!!***

அன்புள்ள சொந்தங்களுக்கு,

வணக்கம்!

கடந்த 11.07.2023 அன்று நமது முப்பாட்டன் மாவீரன் அழகுமுத்துகோன் அவர்களின் 266 வது நினைவுநாள் முன்னிட்டு சென்னை எழும்பூரே மிகவும் பரபரப்பாக இருந்ததை செய்தித்தாள்கள் வழியாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இன்றைய ஆளுங்கட்சியின் வரலாற்றில் ஒரு முதலமைச்சர் வந்து நமது இனத்தின் அடையாளம் மாவீரன் அழகுமுத்துகோனுக்கு மலர் தூவி மரியாதை செய்திருப்பது இதுவே முதல் முறையாகும். மற்ற அரசியல் கட்சிகளும் போட்டி போட்டுகொண்டு நமது இனத்தலைவருக்கு மரியாதை செய்திருப்பது எனக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறது. விரைவில் நடைபெறவிருக்கும் ***நாடாளுமன்ற தேர்தல்.***

THE EDITORIAL BOARD

கௌரவ ஆசிரியர்

**டாக்டர். ஆர். காந்தையா யாதவ்**

**M.S. (General)**

ஆசிரியர்

**இரா. ராஜாராமலிங்கம் யாதவ்** MA., PGDJMC

பதிப்பாளர் & அச்சிடுபவர்

**ஜி. உலகநாதன் யாதவ்** MABL

நிர்வாகம்

**கே. கோதண்டராமன் யாதவ்**

தலைமை நிலையச் செயலாளர்

**ஜி. கே. ஜெய் குமார் யாதவ்**

பொருளாளர்

மணமாலை பகுதி

**கே. அசோக்குமார் யாதவ்**

<u>ஆலோசனைக் குழு</u>

**ஜி.ஜி. கண்ணன் யாதவ், YP தலைவர்**

**அரசு. சீனிவாசன் யாதவ், YP செயலாளர்**

**ஜி.கே.ஜெய் குமார் யாதவ், YPபொருளாளர்**

<u>ஆசிரியர் குழு</u>

**முனைவர்.பேரா.எஸ்.துரைசாமி**

B. Sc., MBA, P.G.D.R.M., P.G.D.C.A., C.G.T., Ph.D.

Prof. & Research Guide MBA Dept. Vels University, Chennai

**ச. முத்துக்கிருஷ்ணன்**

B.Sc., MBA (கவிஞர் சமுகி)

கடையநல்லூர், தென்காசி

**செ.பாரதி**

B.Sc., D.A.E (கவிஞர் பாரதி)

முன்னாள் இராணுவ வீரர், உள்ளாட்சி

நிதி தணிக்கைத் துறை ஆய்வர்

(பணி நிறைவு), சென்னை

<u>வடிவமைப்பு</u>

**செல்வி. பவித்ரா**

<u>புத்தக ஆக்கம்</u>

**டி. ஸ்டீபன்**

**(Seaman Graphics)**

இந்த அரசியல் ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் மயங்கி விடாமல் நமது சொந்தங்கள் மிகவும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய காலம் இதுவாகும். நமது இன வேட்பாளர் யார் நின்றாலும் 40 தொகுதிகளிலும் அவருக்கு வாக்களிக்க வேண்டியது நமது கடமையாகும்.

நமது வேட்பாளர் எந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றாலும் அல்லது சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கினாலும் நாம் அவருக்கு வாக்களித்து நமது சமுதாய கடமையையும் நமது ஜனநாயக கடமையையும் நிறைவேற்றிட வேண்டும் என்று மிக்க பணிவுடனும் அன்புடனும் உங்கள் அனைவரையும் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புடன்

**- இரா. ராஜா ராமலிங்கம் யாதவ்**

ஆசிரியர்





# Chennai Yadav Bhavan

Yadav Bhavan at Egmore, Chennai, Tamilnadu is the Headquarters for Yadavar Peravai & YP Welfare Trust, a Registered and IT exempted under 80G , NGO

OF The Yadavs,

BY the Yadavs &

FOR the Yadavs.

A Pan India Organisation

The Land was Registered in August 2021,

Bhoomi Pooja (Foundation) in March 2022

Building Completed & Ganapathy Homam in June 2023 & to be inaugurated soon

**The main objective is 3Es.**

- **Education**
- **Employment &**
- **Entrepreneurship.**

Hereditary Membership is

Rs. one lakh. (can pay in single or multiple instalments)

So far 150 Hereditary members are enrolled. Our Target is 300 members.

Rs 3 crores plus worth, 860 sq. ft x 3 floors (2,500 sq. ft) building at the Centre of Chennai, very close to Egmore Railway Station.

Board of Trustees elected by the Hereditary Members once in 3 years.

The Present President is Thir. Solaimalai Pitchai Yadav (Madurai)

Its main function is to help economically weaker students of our community. Scholarships are sent to the colleges where they study by cheques & Not cash.

So far 2 crores for over 200 students, since its inception in 2005, was given.

This year (2023) Rs 6 lakhs for 60 students (first instalment) disbursed on 11/07/2023 on the eve of Veeran Alagumuthu Kone Death Anniversary, The First Freedom fighter of the Independence movement in India.

The Bhavan is to House the offices of

1. YP (Yadavar Peravai)
2. YP Welfare Trust
3. Yadav Bhavan
4. OYM (Olikkum Yadavar Murasu, a Bilingual monthly)
5. YBF (Yadav Benefit Fund)

6. Yadav Matrimony

7. Women's Wing

8. Youth (Students) Wing

9. YP Doctors Forum, Yadav Institute of Medical Sciences (YIMS)

10. Affiliated to

A. KFA New Delhi (Krishna Foundation for All)

B. SEWA , Lucknow, UP (Socialist Employees Welfare Association)

C. SFRBC , Coimbatore Tamilnadu (Society For the Rights of Backward Communities)

D. North American US Yadav Maha Sabha, New York, USA

11. YP Help Line

Yadavar Peravai is the Parent Body & the only Democratic organisation of its kind in India Membership is open to Hindu Yadavs Only

You are welcome to Join 🙏

**Membership types**

1. Free (can't participate in elections)

2. Rs. 110/- Life Members (can participate in District Body elections)

3. Rs. 560/- Hereditary Members (can Participate in State Body elections)

For more details contact

**YP Help Line**

**9445573750**

**9444134142**

**- Dr. R. Kanthaiah Yadav**

# பொருளாதார இடஒதுக்கீடு

## இங்கர்சால் நார்வே

## தமிழர் ஆய்வுக் கூடம்


**பகுதி - 9**

*ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு தேவையில்லை.*

*ஏழைகளுக்கு தேவையிங்கு இலவசக் கல்வி.*

### 21. தமிழ்நாட்டு சாதிகளின் பட்டியல்:- (எண்ணிக்கை)

FC முற்பட்ட சாதிகள் (79), BC பிற்படுத்தப்பட்ட சாதிகள் (136), BCM பிற்படுத்தப்பட்ட பிரிவுகள் (இஸ்லாமியர்கள்) (7), MBC மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகள் (41), DNC சீர்மரபினர் (68), SC பட்டியல் சாதிகள் (76), ST பட்டியல் பழங்குகுடியினர் (36).




### 22. இட ஒதுக்கீடு வருணாசன முறையில் அமைக்கப்பட்டதா?

இட ஒதுக்கீடு வருணாசன முறையில் அமைக்கப்பட்டதா இல்லை, முழுவதும், வருணாசன அடிப்படையில் அமைக்கப்படவில்லை. இங்கு அனைத்து மதத்திலும் இருக்கிறார்கள். இதை இங்கு இப்படி குறிப்பிட்ட காரணம், வெறும் சாதிய பார்வையிலும், வெறும் மத பார்வையிலும் மட்டுமே இதை அணுகக் கூடாது என்பதற்காகவே.

Table 1.2: Distribution of Population of each Religion by Caste Categories

*All India-2004-05*


| Religion/Caste | SCs | STs | OBCs | Others | All |
|---|---|---|---|---|---|
| Hindu | 22.2 | 9.1 | 42.8 | 26.0 | 100 |
| Muslim | 0.8 | 0.5 | 39.2 | 59.5 | 100 |
| Christians | 9.0 | 32.8 | 24.8 | 33.3 | 100 |
| Sikhs | 30.7 | 0.9 | 22.4 | 46.1 | 100 |
| Jains | 0.0 | 2.6 | 3.0 | 94.3 | 100 |
| Buddhists | 89.5 | 7.4 | 0.4 | 2.7 | 100 |
| Zoroastrians | 0.0 | 15.9 | 13.7 | 70.4 | 100 |
| Others | 2.6 | 82.5 | 6.2 | 8.7 | 100 |
| Total | 19.7 | 8.5 | 41.1 | 30.8 | 100 |

Source: Distribution obtained from merged sample of Schedule 1 and Schedule 10 of NSSO 61st Round Survey

**23. நவீன வர்ணாசிரம இட ஒதுக்கீடு:-**

பிராமணிய வர்ணாசிரமத்திற்கும், இட ஒதுக்கீட்டில் ஒளிந்திருக்கும் வர்ணாசிரமத்திற்கும், ஒரு வேற்றுமை உண்டு. பிராமணியத்தில் இரண்டாம் நிலையில் இருப்பது சத்ரியர்கள். அவர்கள் BC/MBC பிரிவில் அடங்குவர். ஆனால் நவீன இட ஒதுக்கீடு வர்ணாசிரமத்தில் அவர்கள் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பிராமணியத்தில் SC/ST வரமாட்டார்கள். ஆனால் நவீன இட ஒதுக்கீடு வர்ணாசிரமத்தில் SC/ST கடைசியில் வருவார்கள்.




FC யில் இருப்பது பிராமணர்களும், அரசகுடும்பமும், நில உடையர்களும், பெரும் வணிகர்களும் தான் பெரிதாக அடங்குவர்.

வர்ணத்தில் சத்ரியன் (BC/MBC) உயர்ந்தவனாக இருந்தாலும், இட ஒதுக்கீட்டில் பெரிதும் அடக்குமுறைக்கு உள்ளாகி இருப்பவர்கள் அவர்கள் தான். அதற்குக் காரணம் என்னவென்று தெரியாமல் அவர்கள் SC/ST மக்களை சாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

பொதுவாக இட ஒதுக்கீடு என்பது தனக்குக் கீழே உள்ளவர்கள் தனது இடத்தை திருடுவது போன்ற ஒரு எண்ணம் பொதுப்புத்தியில் அனைத்து சாதியினரிடமும் பரவியுள்ளது.உண்மை அதுவல்ல இங்கு அனைத்து சாதியின் இடத்தையும் திருடுவது, அதிகாரத்தில், வர்ணாசிரமத்தில் உச்சியில் இருக்கும் FC பிரிவில் அதிகம் இருக்கும் பிராமணர்கள் தான்.

2015 ஆம் ஆண்டு கணக்கீடு படி மத்திய அரசு வேலைகளில் BC/ MBC பிரிவினர் வெறும் 12% மட்டுமே BC/MBC ளால் நிரப்பப்படுள்ளது. அப்படி என்றால் சமூக நீதி மூன்று வருடத்துக்கு முன்பு வரை 88 சதவீதம் பின்தங்கி உள்ளது.

**தொடரும்.**

**- டாக்டர் இரா. காந்தையா யாதவ்**

# கல்வி நிதி உதவி

பொருளாதாரத்தில் சவாலை ஏற்கும் மாணவமணிகளுக்கு கல்வி நிதி உதவி வழங்கும் விழா

இடம் : யாதவ் பவன் எழும்பூர்

நாள் : 11.07.2023


யாதவர் பேரவையின் உயர்மட்டக் குழு தலைவர் திரு. வேலுச்சாமி அவர்கள் முன்னிலை வகிக்க, யாதவர் பேரவை தலைவர் சேலம் ஜி ஜி கண்ணன் யாதவ், சென்னை முகப்பேரில் அமைந்துள்ள சின்னசாமி திருமண மஹால் உரிமையாளரும், யாதவ் பவன் பங்குதாரரும் , குழந்தைகளின் கல்விக்கு தாராளமாக பொருளுதவி அளிப்பவர்களில் ஒருவருமான மஸ்கட் திரு. ராமலிங்கம் யாதவ் அவர்கள் தலைமை வகிக்க நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

மேலும் தேசத்தின் விடுதலைக்கு போராடிய போராளிகளின் பட்டியலில் தாய் மண்ணின் விடுதலைக்கு முதல் குரல் கொடுத்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி பீரங்கி குண்டுக்கு தன் மார்பை காட்டி 15 ஆம் நூற்றாண்டிலேயே முதல் பலியானவர் மாவீரன் அழகுமுத்துக்கோன்.

அவருக்கு இன்று சென்னை எழும்பூரில் உள்ள யாதவ் பவனில் குருபூஜை நடைபெற்றது. அதனை தொடர்ந்து பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. மேலும் நலத்திட்ட உதவிகளை சென்னை அறக்கட்டளை துணைத் தலைவர் திரு வசந்தகுமார் அவர்கள் வழங்கினார். இதனை தொடர்ந்து பேரவை மற்றும் அறக்கட்டளை பொதுக்குழு கூட்டம் நிறுவனர் டாக்டர் காந்தையா யாதவ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது . மேலும் வரும் நாடாளுமன்ற தேர்தல் 2024 தொடர்பாகவும் ஆலோசனை நடைபெற்றது. விழா ஒருங்கிணைப்பாளர்களாக யாதவர் பேரவையின் தலைமை நிலைய செயலாளர் கே. கோதண்டராமன் யாதவ் ,மகளிர் அணி தலைவர் திருமதி. பிரியா கண்ணன் யாதவ் , ஒலிக்கும் யாதவர் முரசு பதிப்பாளர் திரு ஜி. உலகநாதன் யாதவ் , நேஷனல் டிராவல்ஸ் திரு முத்துக்குமார் யாதவ் , யாதவர் பேரவை வர்த்தக அணி செயலாளர் திரு. அண்ணாதுரை யாதவ் , Y.P. சுய உதவி குழு ஆர் .ஏ .புரம் திரு. வேலு யாதவ் , புகைப்பட நிபுணர் திரு. ரங்கநாதன் யாதவ் ஆகியோரும் பங்கேற்றனர் .

நன்றி உரை திரு கே. கோதண்டராமன் யாதவ் வழங்கினார்.

**- ஜி. உலகநாதன் யாதவ்**






TN NEWS


TN NEWS


TN NEWS


TN NEWS

# கணபதி ஹோமம்

யாதவர்களுக்கான யாதவ் பவனில் வியாழக்கிழமை அன்று 29.06.2023 அன்று சுபயோக சுபதினத்தில் கணபதி ஹோமம் காலை 4.30 மணியளவில் கோ பூஜையுடன் துவங்கியது. மாடு கன்றுக்கு பூஜைகள் செய்து உள்ளே அழைத்து வரப்பட்டது. Y.P நல அறக்கட்டளையில் முதல் பங்குதாரரும் வயதில் மூத்த யாதவரும் ஆன கேசவன் போர்வெல் கேசவன் அவர்களையும் அவரது மனைவியாரையும் முன்னிலைப்படுத்தி இவர்களுடன் நிறுவனர் டாக்டர் காந்தையா திருமதி காந்தையா ஆகியோரும் அமர்ந்து ஹோம பூஜையை இனிதே செய்தனர் யாதவர் பேரவை வரலாற்றில் ஓர் மைல்கல்லாக யாதவ் பவன் விளங்குகிறது.

யாதவர் பேரவையின் உயர்மட்டக்குழு தலைவர் கோவை திரு. வேலுச்சாமி யாதவ் அவர்கள், Y.P. அறக்கட்டளைத் தலைவர் சோலைமலை பிச்சையாதவ், செயலாளர் திரு நவநீதகிருஷ்ணன் யாதவ், தனது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து கொண்ட பொருளாளர் திரு அசோக்குமார் யாதவ், யாதவர் பேரவை தலைவர் திரு G.G. கண்ணன் யாதவ், செயலாளர் திரு. அரசு சீனிவாசன் யாதவ், அவரது மனைவியார் ஆடிட்டர் திருமதி. ஜமுனா ராணி அரசு யாதவ், ஹோம நிகழ்விற்காக கடுமையாக உழைத்த பொருளாளர் திரு ஜெயக்குமார் யாதவ், ஒலிக்கும் யாதவர் முரசு பதிப்பாளர் திரு ஜி. உலகநாதன் யாதவ் அவரது மனைவியார் திருமதி விஜயலட்சுமி உலகநாதன் யாதவ், Y.P. Business wing Organizer திரு அண்ணாதுரை யாதவ், பேரவையின் தலைமை நிலைய செயலாளர் திரு. கே. கோதண்டராமன் யாதவ் அவர்கள், பேரவையின் மற்ற பங்குதாரர்கள், ரமேஷ் டிராவல்ஸ் திரு ரமேஷ் யாதவ், ஜான்சன் அண்ட் ஜான்சன் முன்னாள் நிர்வாகி நாராயணமூர்த்தி யாதவ், பேரவை தலைவரின் சகோதரர் திரு. சம்பத் யாதவ் திருமதி சம்பத் யாதவ், டாக்டர் முத்துலட்சுமி யாதவ், திரு சுதர்சனம் யாதவ், டாக்டர் தாமோதரன் அவர்களின் துணைவியார் திருமதி ரம்யா ஸ்ரீதரன் யாதவ், அவரது தாயார் திருமதி ஸ்ரீதரன் யாதவ், மற்றும் திரு. அப்பாசாமி யாதவ் முன்னாள் (ஆர் டி ஓ).

பேரவையின் ஆரம்பகாலம் முதல் Support செய்து வரும் MCRENNET திரு .செல்வராஜ் யாதவ், அவரது துணைவியார் திருமதி பிரேமா செல்வராஜ் யாதவ், மகன் திரு வினோத்யாதவ், திருமதி பிரியா கண்ணன் அவர்கள், காஞ்சிபுரம் திருமண மண்டப உரிமையாளர் திரு. யாதவ், மவுண்ட் ரோடு திரு ரவி யாதவ், திரு லலித் (பவனுக்கு மின்னொளி கொடுத்தவர்) மற்றும் அலுவலக செயலாளர் செல்வி பவித்ரா, அலுவலக பணியாளர்கள் திருமதி இந்திரா திரு முனுசாமி சூப்பர்வைசர் திரு கருணாகரன் யாதவ், மற்றும் திரு மதனகோபால் யாதவ் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

காலை டிபன் ஏற்பாடு செய்தவர்களுக்கும் புகைப்பட நிபுணர் திரு ரங்கநாதன் யாதவ் அவர்களுக்கும் போர்டு மாற்றுவதில் இருந்து சகல வேலைகளையும் உரிய நேரத்தில் செய்து கொடுத்தவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஹோமம் செய்து யாதவ பவனை புனிதம் செய்து தந்துவிட்டார் நிறுவனர் டாக்டர் காந்தையா அவர்கள்.

**- ஜி. உலகநாதன் யாதவ்**






GADGET PARK





# விளக்கேற்றும் நேரும்




**காலை மாலை விளக்கேற்ற கடவுள் கூறினாரா... ஏன் விளக்கு ஏற்ற வேண்டும்.?**

காலையும், மாலையும் ஏன் விளக்கு ஏற்ற வேண்டும்? விளக்கு ஏற்றினால் தான் வாழ்க்கை வளமாக இருக்குமா? கடவுள் வந்து விளக்கேற்ற சொன்னாரா? இப்படி பல பேர் விதண்டாவாதம் செய்து கொண்டிருப்பார்கள். இன்று நம்மில் எத்தனை பேர் வழக்கமாக விளக்கு ஏற்றும் பழக்கத்தை கொண்டிருக்கிறோம்?

நமது முன்னோர்கள் நாள் தவறாமல் காலையும், மாலையும் விளக்கு ஏற்றி வந்தனர் என்பது உங்களுக்கு தெரியுமா? அதற்கு என்ன காரணம்? கட்டாயம் விளக்கேற்ற அறிவுறுத்துவதன் தத்துவம் என்ன? ஒரு சிலர் காலையில் மட்டும் விளக்கு ஏற்றுவார்கள். ஒரு சிலர் மாலையில் மட்டும் விளக்கு ஏற்றுவார்கள். இன்னும் பலர் வெள்ளிக்கிழமை மட்டும் விளக்கு ஏற்றி வைப்பார்கள். இவ்வாறு விளக்கு ஏற்றுவதற்கு அவர் அவர்களுக்கு வசதியாக இருக்கும் நேரத்தையும், சாஸ்திரத்தையும் கடைபிடிப்பார்கள். உண்மையில் காலை, மாலை இருவேளையும் விளக்கேற்ற வேண்டுமா? ஏன்? என்று இந்த பதிவில் தெளிவாக காணலாம் வாருங்கள்.

காலையில் தீபம் ஏற்றுவது என்பது நமது முன்னோர்கள் தவறாமல் செய்து வந்த ஒரு விஷயம் தான். அன்றைய காலகட்டத்தில் விவசாயத்திற்கும், மற்ற பல வேலைகளுக்கும் செல்லும் குடும்பத் தலைவர்கள் தான் இருந்தார்கள். செல்லும் காரியம் தடைகள் இன்றி நல்லபடியாக முடிக்க வீட்டில் காலையில் தீபம் ஏற்றி சூரிய பகவானை வணங்கும் பழக்கம் இருந்து வந்தது.

சூரிய நமஸ்காரத்தை இரு உள்ளங்கைகளை சேர்த்து வான் நோக்கி காண்பித்து பின்னர் கைகூப்பி வணங்குவார்கள். உள்ளங்கையில் பிரபஞ்சத்தின் நல்லவற்றை கிரகிக்கும் ஆற்றல் உண்டு. இதனால் அவர்களின் உடலும், மனமும் தெளிவாக இருந்தது. சூரிய வணக்கம் இன்று உடல் ஆரோக்கியம் தரும் என்று புரிந்து கொண்டு இருக்கிறோம். அன்று எந்த டாக்டரும் இதை சொல்லி நம் முன்னோர்கள் செய்யவில்லை.

சூரியன் உதயமாகும் முன்னர் ஆரஞ்சு வண்ணத்தில் மேல் எழும் சூரியக் கதிர்கள் அருணோதயம் என்று கூறுவார்கள். இந்த அருணோதய நேரத்தில் விளக்கு ஏற்றி வைத்தால் கடவுளின் ஆசீர்வாதம் முழுமையாக கிடைக்கும். உடலும், மனமும் ஆரோக்கியம் பெறும். அன்றைய நாள் முழுவதும் எதையோ சாதித்த திருப்தி உண்டாகும். இதை உணர்ந்து பார்த்தால் தெரியும்.

இந்த வேளையில் தீபம் ஏற்றினால் வீட்டில் மூதேவி நுழைவதை தவிர்க்க முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். தரித்திரம் ஏற்படாமல், நேர்மறை சக்திகள் வீட்டை சுற்றி இருக்கும். இதற்கு அறிவியல் காரணமும் உண்டு. அருணோதயத்தில் தான் பூக்கள், தன் இனிய இதழ்களை விரித்து அழகாய் மலரும். பூக்கள் மலர்வதை அந்த நேரத்தில் நீங்கள் காண முடியும். செடி, கொடி, மரம் என்று தாவரங்கள் அனைத்திற்கும் இந்த நேரத்தில் தான் உயிர் தன்மை அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் துவங்கும் செயல்கள் நன்மைகளை பெற்றுத் தரும்.

அதே போல் சூரியன் மறையும் நேரத்திற்கு முன்னர் வீட்டில் தீபம் ஏற்ற வேண்டும். மறையும் சூரியக் கதிர்கள் மூலமும் சில தாவரங்கள் உயிர்பெறும். ஓர் இடத்தில் அறிவியல் இருந்தால் அங்கு ஆன்மீகமும் கட்டாயம் இருக்கும். மூதேவியை விரட்டி ஆயிற்று. அடுத்து ஸ்ரீ தேவியை வீட்டிற்குள் அழைக்க வேண்டுமே!! லக்ஷ்மி தேவி வீட்டில் இருந்தால் தான் நன்மைகளும், செல்வ வளமும் இல்லத்தில் நிறைந்து இருக்கும்.

தினமும் தவறாமல் மாலை சூரியன் மறையும் நேரத்திற்கு முன்னர் தீபம் ஏற்றிவிட வேண்டும். இதனால் அஷ்ட லக்ஷ்மிகளும் வீட்டிற்குள் வருவார்கள். நமது இல்லத்தில் எப்போதும் லக்ஷ்மி கடாட்சம் இருக்கும். எண்ணங்கள் தான் வாழ்க்கை. நம்பிக்கையுடன் கூடிய பிரார்த்தனைகள் எந்த நேரத்தில் செய்தாலும் பலிக்கும். ஆனாலும் சூரிய பகவானின் உதயமும், அஸ்தமனமும் நம் பிரார்த்தனைகளை பரிபூரணமாக ஏற்கும் ஆற்றல் கொண்டது.

எவ்வளவு பணிகள் நமக்கு இருந்தாலும் பரவாயில்லை. அதற்கு இடையில் ஒரு நிமிடம் நம்மால் நேரம் ஒதுக்க முடியாதா? தீபம் ஏற்றுவதற்கு முக்கிய காரணம் குடும்பம் அமைதியாக, சுபீட்சமாக இருக்கத் தானே? இன்று பலருக்கும் நிம்மதி இல்லாமல் போனதற்கு காரணம் மன அழுத்தம். தினமும் 2 நிமிடம் காலையும், மாலையும் தீபம் ஏற்றுவதால் மனம் இறுக்கத்திலிருந்து விடுபட்டு தெளிவு பெறும். தொட்டதெல்லாம் துலங்கும். 1 நிமிடம் கண்களை மூடி வேண்டிக் கொள்ளுங்கள். இந்த நேரத்தில் வேண்டும் வேண்டுதல் அப்படியே பலிக்கும். சகல செல்வங்களும் அமைந்து மோட்சம் கிட்டும்.

**- டாக்டர். ஆர். காந்தையா யாதவ்**



## தலைமை அலுவலக நிர்வாகம் வரவு செலவு கணக்குகள்.

**June to July 2023**

**HQ.Sec Mr. Kothandaraman Yadav, Cell: 94440 50110**

**Treasurer Mr. Jaikumar Yadav , Cell:93810 63565**



HQ.Secretary

Treasurer

## Receipts

| S.No | Name | Receipt Book No. | Receipt Voucher No | Amount | Date | Payment |
|---|---|---|---|---|---|---|
| **1** | Baskaran | 14 | 651 | 5,000 | 20.07.2023 | YPWT |

**YPWT:** Yadhavar Peravai Welfare Trust **YP:** Yadhavar Peravai
**OYM:** Olikkum Yadavar Murasu

## Expenses

| S.No | Head of Accounts | Amount |
|---|---|---|
| 1. | Postage | 1,239 |
| 2. | Stationery | 150 |
| 3. | Salary | 12,000 |
| 4. | Other Expenses | 1,928 |

### அடுத்த இதழில்

- இம்மாதம் பல புதிய சந்தாதாரர்கள் கிடைத்துள்ளார்கள். அவர்கள் அனைவர்க்கும் ஆகஸ்ட் 2023 முதல் வாரத்தில் சந்தா செலுத்திய ரசீது அனுப்பி வைக்கப்படும் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஜூன் 2023 திங்களில் மட்டும் நமது யாதவர் பேரவை நல நிதிக்கு Rs. 12,50,000 நமது சொந்தங்களிடம் இருந்து நன்கொடையாக பெறப்பட்டது. அதன் விவரம் மற்றும் பட்டியல் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

- ஆசிரியர்

# நெல்லையப்பரைக் கண்டெடுத்த ராமக்கோன்



நெல்லையின் மாண்புமிகு அடையாளமான நெல்லையப்பர் கோவிலின் மூலவமூர்த்தி ஸ்ரீ நெல்லையப்பரின் முதல் தரிசனம் இந்த இடையனுக்கே கிட்டியது... கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலி அருகே ராஜவல்லிபுரத்தில் வசித்தவர் ராமகோன். இவர், தினமும் பாண்டிய மன்னனின் அரண்மனைக்கு வேணுவனம் எனப்படும் மூங்கில்காட்டை கடந்து பால் கொண்டு செல்வது வழக்கம். அவ்வாறு சென்றபோது குறிப்பிட்ட இடத்தில் தினமும் மூங்கில் மரத்தால் கால் இடறி ராமக்கோன் கீழே விழுந்தாராம்.

அதனை மன்னரிடம் தெரிவித்து அந்த இடத்தில் வளர்ந்திருந்த மூங்கிலை வெட்டிபோது ரத்தம் வடிந்தது. அதன்பின்பு மூங்கில் இருந்த பகுதியைத் தோண்டியபோது சிவலிங்கம் காணப்பட்டதாம். அதன்பின்பே வேணுவனநாதர் என்ற பெயருடன் அருள்மிகு நெல்லையப்பரின் மூலஸ்தானம் உருவாக்கப்பட்டது. நெல்லையப்பரின் முதல் தரிசனம் கிட்டி நெல்லையப்பரை முற்றும் கண்டதால் இவர் முற்றும் கண்ட ராமக்கோன் என வணங்கப்படுகிறார்.

இக்கோயிலில் மூலஸ்தானத்தின் பின்புறம் தாமிரசபைக்கு அருகே முற்றும் கண்ட ராமக்கோன், அவரது மனைவி ராக்காயி அம்மாள் ஆகியோருக்கு சிலைகள் உள்ளன. இங்கு வருடாவருடம் முற்றும் கண்டதை நினைவுகூறும் வகையில் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது.

பொற்றாமரை குளத்தில் இருந்து பால்குட ஊர்வலம் நடந்து, மாலையில் சந்தனக்காப்பு அலங்காரத்தில் ராமக்கோன் அருள்பாலிப்பார். ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

ஆதியும் அந்தமுமான சிவபெருமாளை வேணுவனத்தில் கண்டெடுத்து நெல்லை மாநகர் உருவாக காரணமாக இருந்த முற்றும் கண்ட ராமக்கோனை இன்று நெல்லையப்பரின் ஆனி தேரோட்ட நன்னாளில் வணங்குவோம்...

**நன்றி**

**- திரு. வெற்றி வீரன் யாதவ்**

## மாவீரன் அழகுமுத்துக்கோன் குரு பூஜை விழா தொகுப்பு

சென்னையில் நடைபெற்ற அழகுமுத்துகோன் அவர்களின் குரு பூஜையில் தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டார். மேலும் அமைச்சர் திரு. R.S.R ராஜ கண்ணப்பன், பெரிய கருப்பன் மற்றும் சென்னை மாநகராட்சித் துணை மேயர் திரு. மகேஷ் குமார் அவர்களுடன் திமுக அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அவர்களுடன் யாதவ மகா சபை தலைவர் நாசே. ராமசந்திரன் அவர்களும் கலந்து கொண்டார்.

தமிழ்நாடு பாஜக மாநில தலைவர் திரு. அண்ணாமலை, துணைத் தலைவர் ஜிபிஸ் நாகேந்திரன் யாதவ் மற்றும் தெலுங்கானா மற்றும் புதுச்சேரி ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களும் குரு பூஜையில் கலந்து கொண்டனர்.

அதிமுக சார்பில் தமிழக எதிர்க்கட்சி தலைவர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் கோகுல இந்திரா, ஜெயக்குமார் மற்றும் அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள். மதிமுக சார்பில் திரு வைகோ கலந்து கொண்டார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் விஜய் வசந்த் MP அவர்களும், கோகுல மக்கள் கட்சி சார்பில் என் பி சேகர் அவர்களும் தங்கள் நிர்வாகிகளுடன் கலந்து கொண்டனர். முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் அவர்களும் அழகுமுத்துக்கோன் அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தினர். நடிகர் கூல் சுரேஷ் மற்றும் இயக்குனர் G. மோகன் அவர்களும் அழகுமுத்துக்கோன் அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

கட்டாலங்குளத்தில் தூத்துக்குடி கலெக்டர் திரு செந்தில் ராஜ் அவர்களுடன் அதிமுக MLA கடம்பூர் ராஜு மற்றும் பொட்டல்துரை அவர்களும் புகழ் அஞ்சலி செலுத்தினார்கள். அழகுமுத்துகோன் நல சங்க தலைவர் காயாம்பு விஜயராகவன் மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இராதாபுரம் சுற்றுவட்டார யாதவ நலச்சங்கம் சார்பாக G. தேவபிரான் அவர்கள் தொண்டர்கள் புடைசூழ புகழ் அஞ்சலி செலுத்தினர். பின்னர் MLA ராஜா, நெல்லை துணை மேயர் K R ராஜு, குரு வசந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். பின் இந்து மக்கள் கட்சி அர்ஜுன் சம்பத், மற்றும் பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு பரமேஸ்வரன் யாதவ் அவர்கள் சிறப்பான வரவேற்பை வழங்கினார்.

தேமுதிக கட்சி சார்பில் தூத்துக்குடி மாவட்ட செயலர் சுரேஷ் தலைமையில் அதன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். காங்கிரஸ் கட்சி சார்பில் அதன் முன்னாள் MLA மலேசியா பாண்டியன் யாதவ் கலந்து கொண்டார். அகில இந்திய யாதவர் பாதுகாப்பு பேரவை சார்பாக கேப்டன் ராஜன் அவர்கள் புகழ் அஞ்சலி செலுத்தினார்.

மதுரை: மதுரை யாதவர் கல்லூரியில் அதன் நிர்வாகிகளும் நாம் தமிழர் கட்சி சீமான் அவர்களும் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

நெல்லை: பொட்டல் துரை, துணை மேயர் K.R ராஜு, MLA அப்துல் வகாப் மற்றும் யாதவர் சிகரம் பத்திரிகையாளர் ஆகியோர் புகழ் அஞ்சலி செலுத்தினர். டாக்டர். தேவநாதன் யாதவ் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.பின் பாஜக MLA நயினார் நாகேந்திரன், மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் குரு பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது. மும்பை யாதவ மகா சபை சார்பாகவும் குருபூஜை கொண்டாடப்பட்டது. விழுப்புரத்தில் MLA க்கள் புகழேந்தி மற்றும் லட்சுமணன் ஆகியோர் மலர்த்தூவி மரியாதை செய்தனர்.

அழகுமுத்துக்கோன் இளைஞர் பேரவை சார்பாக பொள்ளாச்சியில் மாசானமுத்து மற்றும் வாசுதேவன் கிருஷ்ணன் தலைமையில் விழா நடைபெற்றது. டெல்டா அழகுமுத்துகோன் நலச்சங்கம் மற்றும் பாஜக சார்பாக அய்யம்பேட்டை பசுபதி கோவிலில் நடைபெற்ற குருபூஜையில் பள்ளி குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகம் வழங்கப்பட்டது.

இது தவிர விருதுநகர், சிவகங்கை, திருப்பத்தூர், மாவட்டங்களிலும் தஞ்சாவூரிலும் பேராவூரணியிலும் குருபூஜை விழா சிறப்புடன் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் முன்னாள் அமைச்சர் ராஜலக்ஷ்மி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோவிலிலும் குருபூஜை விழா சிறப்புடன் நடைபெற்றது.

***யாதவ சொந்தங்களுக்கு வணக்கம்***

எனது பெயர் கோ. ஆதிநாதன்

சொந்த ஊர் ஸ்ரீவைகுண்டம்

தந்தை பெயர்: சு.கோவிந்தன், நூலகர்.

நான் நமது யாதவ சொந்தங்களை இணைப்பதற்காக WhatsApp குரூப் ஒன்றை ஆரம்பித்துள்ளேன். அதில் தற்சமயம் சுமார் 200 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த குரூப்பின் முதல் நோக்கம் தெரியாத சொந்தங்களை தெரிந்து கொள்வதற்காக வருங்கால சந்ததியினர் நமது உறவுகளை தெரிந்து கொள்ள வேண்டும். வரன் பற்றிய தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது.

குரூப்பின் பெயர் நமது சொந்தங்கள் What's App No: 98650 74628

***மணமகன் மணமகள் தேடுபவர்களுக்காக***

நமது சமுதாயத்தில் மணமகன் மணமகள் தேடுபவர்களுக்கு வாட்ஸ் ஆப் குரூப் உள்ளது. மணமகன் தேடுபவர்களுக்கு (YP Matrimony Bridegroom) குரூப்பிலும் மணமகள் தேடுபவர்களுக்கு (YP Matrimony Bride) குரூப்பிலும் இணைக்கப்படுவார்கள். பெற்றோர்கள் தனது பிள்ளைகளுக்கான ஏற்ற வரன் கிடைத்ததும் குரூப்பில் இருந்து தானே விலகும் வசதி உள்ளது. எனவே இந்த குரூப்பில் இணைய விரும்புபவர்கள் இந்த 94441 34142, 99943 33283 எண்ணை தொடர்புக் கொள்ளவும்.

# அயோத்தியை ஆண்ட இராமர் பாதம்



சீதையை மணம் செய்து கொண்டு அயோத்திக்குத் திரும்பினார் ராமபிரான். நாட்டு மக்கள் எல்லோரும் ராமபிரானை வாழ்த்தி விதவிதமான பரிசுகளை அளித்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் மித்ரபந்து என்ற செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவனும் இருந்தான். அவன் கைகளில் ராமனுக்கே அளவெடுத்துத் தைத்தது போன்ற அழகான இரு பாதுகைகளே இருந்தன. வரிசையாக ஒவ்வொருவரும் தாங்கள் எடுத்து வந்த பரிசுப் பொருட்களைத் தந்து கொண்டிருந்தார்கள்.

அனைத்தையும் பார்த்த மித்ரபந்துவுக்கு வருத்தம் நேரிட்டது. எல்லோரும் விலை உயர்ந்த பரிசுகளைத் தரும்போது, தான் மட்டும் அற்ப காலணிகளையா தருவது? என நினைத்தவன், ராமரைப் பார்க்கப் போகாமலே திரும்ப யத்தனித்தான்...

அதனை கவனித்துவிட்ட ராமபிரான், அவனை அருகே அழைத்தார். உண்மையான உழைப்பில் உருவான உன் பரிசு தான் இங்கே இருக்கும் அனைத்தையும் விட உயர்ந்தது. எனக்குப் பிரியமானதும் இதுவே! ராமர் சொல்ல, அவரது அன்பில் நெகிழ்ந்து போனான் மித்ரபந்து.

ராமபிரான் வனவாசம் செல்லப் புறப்பட்டபோது, தாயே, வனவாசம் செல்லும்போது எதையுமே எடுத்துச் செல்வது கூடாது தான். இருப்பினும் இந்தப் பாதுகைகளை அணிந்து செல்ல அனுமதியுங்கள்! என்று கேட்டு அனுமதி வாங்கினார். கூட்டத்தில் கண்ணீர் வழிய நின்று கொண்டிருந்த மித்ரபந்துவை நோக்கினார்,
விலை உயர்ந்த எந்தப் பரிசும் எனக்குப் பயன்படவில்லை. நீ அளித்த காலணிகள் தான் என் கால்களைக் காக்கப் போகின்றன! என்றார்.

உண்மை அன்பின் அடையாளமான அந்தப் பாதுகைகளே பின்னர், அயோத்தியின் அரியணையில் அமர்ந்து பதினான்கு ஆண்டுகள் ஆட்சியும் செய்தன. கடவுளுக்கு யார் என்ன செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல... நீங்கள் உங்களால் முடிந்ததை மனப்பூர்வமான பக்தியுடன் அன்புடன் அவரது திருவடிகளில் சமர்ப்பியுங்கள்...

அதுதான் கடவுளை சந்தோஷப்படுத்தும்...
இறைவனுக்குப் பிரியமானதாகவும் இருக்கும்..

**- டாக்டர். ஆர். காந்தையா யாதவ்**

## அழகுமுத்துக்கோன் வரலாற்றை பாடநூலில் சேர்க்க வேண்டும்



# அழகுமுத்துக்கோன் வரலாற்றை பாடநூலில் சேர்க்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.12- சுதந்திர போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் பிறந்தநாளையொட்டி, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தன்னுடைய டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

ஆங்கிலேயர்களுக்கு எதிரான முதல் விடுதலை போராட்டத்தை முன்னெடுத்து, இன்னுயிரை தியாகம் செய்த விடுதலைப் போராட்டத் தலைவர் மாவீரன் அழகுமுத்துக்கோனின் 313-வது பிறந்தநாளும், 266-வது குருபூஜையும் இன்று. ஆங்கிலேயர்களை எதிர்க்க முடியுமா? என மற்றவர்கள் மிரண்டு நின்ற போது, தமது 45-வது வயதில் ஆங்கிலேயப் படைகளை வீழ்த்தியவர் அழகுமுத்துக்கோன். தாய்நாட்டுப்பற்று எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு மாவீரன் அழகுமுத்துக்கோன் சிறந்த எடுத்துக்காட்டு. அவரது வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டுச் சென்று சேர்க்க நாம் இந்த நாளில் உறுதியேற்போம். அவரது வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவோம். அவரது வரலாற்றை பாடநூலில் சேர்க்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அதில் அவர் பதிவிட்டுள்ளார்.

இதேபோல், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. தன்னுடைய டுவிட்டர் பதிவில், 'மண்ணையும், மக்களையும் காக்க எந்த எல்லைக்கும் செல்வேன்; எந்த தியாகத்தையும் செய்வேன் என்பதற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர் வீரன் அழகுமுத்துக்கோன். இந்த நாளில் மாவீரன் அழகு முத்துக்கோனின் வீரத்

அழகுமுத்துக்கோன் நினைவுநாளையொட்டி பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், அவரின் டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது ஆங்கிலேயர்களுக்கு எதிரான முதல் விடுதலைபோராட்டத்தை முன்னெடுத்து, இன்னுயிரை தியாகம் செய்த விடுதலைப் போராட்டத் தலைவர் மாவீரன் அழகுமுத்துகோனின் 313 - வது பிறந்தநாளும், 266 வது குருபூஜையும் இன்று (11.07.2023). ஆங்கிலேயர்களை எதிர்க்க முடியுமா? என மற்றவர்கள் மிரண்டு நின்ற போது, தமது 45 வது வயதில் ஆங்கிலேயப் படைகளை வீழ்த்தியவர் அழகுமுத்துக்கோன். தாய்நாட்டுப்பற்று எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு மாவீரன் அழகுமுத்துக்கோன் சிறந்த எடுத்துக்காட்டு. அவரது வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டுச் சென்று சேர்க்க நாம் இந்த நாளில் உறுதியேற்போம். அவரது வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவோம். அவரது வரலாற்றை பாடநூலில் சேர்க்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் அதில் பதிவிட்டுள்ளார்.



## குழந்தைத் தொழிலாளி ஒழிப்பு தினம்

சிறகு முளைக்கா குஞ்சுகளை இரை தேட
பறவை இனங்கள் பணிப்பது இல்லை
பால் குடித்து கால்களுக்கு இடையே பாதுகாப்பாய் வளரும்
வால் குட்டிகளை வேட்டையாட பணிப்பதில்லை விலங்குகள்

பெற்ற குழந்தையை பேணிப் பாதுகாக்க துப்பில்லா
உற்ற பெற்றவரே உழைக்கச் சொல்வது ஞாயமோ
குழந்தை ஊதியத்தில் உயிர் வளர்ப்பது
அழுகிய தன்ஊனை தானே உண்ணச்சமம்

பிறந்த குழந்தைக்கு உணவு மட்டுமல்ல
சிறந்த கல்வி சுகாதாரம் உரிய வயதுவரை உரிமை
பள்ளி செல்ல வேண்டிய வயதில் பணிக்கு
அள்ளிச் செல்வது அடிப்படை உரிமை மீறல்

குழந்தை உழைத்தால் மழலை மழுங்கும்
குழந்தை உழைத்தால் கூர்அறிவு குறையும்
குழந்தை உழைத்தால் ஒழுக்கம் ஓங்காது
குழந்தை உழைத்தால் சமுதாயம் சீர்கெடும்

ஆறறிவு பெற்று அகில உலகத்தையும்
ஓரிரு பொத்தானை அழுத்தி இயங்க வைக்கும்
பேராற்றல் கொண்ட மானிடமே குழந்தை தொழில்
சீரழிவு இல்லையா வருங்கால நிர்மாணத்திற்கு

**- செ. பாரதி**




# மணமாலை

## மணமகள் விபரம்




| பெயர்-படிப்பு-தொழில் | நட்சத்திரம் | ராசி | தந்தைபெயர் | தொலைபேசி |
|---|---|---|---|---|
| K.ரேவதி, **B.com, BA**<br>BNY Melon, (DLF Campus) | சுவாதி<br>17.03.1998 | துலாம் | P.கிருஷ்ணமூர்த்தி<br>சென்னை | 9884305201 |
| S.ஹேமமாலினி **M.Sc.,** Data Entry Operater | பூசம்<br>10.02.1998 | கடகம் | D.சீனிவாசன்<br>சென்னை | 93800 46432 |
| H. அக்ஷயா கிருஷ்ணன்<br>(MBA (Shiping and ort Management) IN - Patient Billing (Apollo Hospital) | கார்த்திகை<br>25.08.1997 | ரிஷபம் | G. அரிகிருஷ்ணன்<br>வேளச்சேரி | 9444973852 |
| S.விஷ்னுப்ரியா BSPA (BITS University) A Embryologist in Anova Fertility & Reproductive Heath, Toronto, Ontario, Canada | மகம் 3ம் பாதம்<br>03.04.1993 | சிம்மம் | S.சுப்ரமணியன் | 9444939883<br>9677219654 |
| K.விசாலி DCA<br>HDFC | ரோகினி<br>29.07.1997 | ரிஷபம் | M.கிருஷ்ணமூர்த்தி<br>சென்னை | 9841504512 |
| திவ்யா MA Socialogy | விசாகம்<br>02.08.1998 | | S. செல்வராஜ்<br>அரியலூர் | |
| P. ரோகினி<br>B.Com | சுவாதி<br>19/04/2000 | துலாம் | பன்னீர் செல்வம்<br>சென்னை | 6385103789<br>7418362887 |
| N. பிரியதர்சினி,<br>10th | மூலம்<br>15.01.1999 | தனுசு | நர்குணன்<br>திருப்பத்தூர் | 6382734980 |
| Dr. R.B. தாரகேஸ்வரி<br>MBBS | சுவாதி<br>29.06.1993 | துலாம் | பாலாஜி<br>செங்கல்பட்டு | 8680097440<br>9840359593 |
| R. கீர்த்தனா<br>B.E | அவிட்டம்<br>24.04.1995 | | ராமசந்திரன் | 9443333285 |
